(உ) திருப்பணி விழாக்குழு அந்த துறையின் மூலம் சர்க்காருக்கு திருப்பித்தர வேண்டிய பாக்கி ஏதேனும் உண்டா ?

(எ) திருப்பணியின் வரவு-செலவுகளை ஆடிட் செய்யப்பட்ட ஆடிட் ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ரூ. 23,39,491·89.

(இ) இந்து சமய-அறக் கட்டளைகள் துறை மானியம் எதையும் வழங்கவில்லை.

(உ) இந்த வினா எழவில்லை.

(எ) இத்தணிக்கை அறிக்கைகள் 1371 முதல் 1375 வரையிலுள்ள பசலிகளைப் பற்றியன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் மூலம் ஏற்பட்ட பொதுவான விளைவுகள் போதிய அளவு மனநிறைவு அளிப்பவையாக கருதப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் பல பக்கங்களைக் கொண்டவை. எனவே, பேரவையில் அவற்றை வைக்க இயலவில்லை.

Thiru N. KASIRAMAN : Similarly when temple funds are diverted to non-governmental functions, will the Government be pleased to audit those accounts and to place the audit report before this House since temple funds are public properties and are under the control of the Government ?

மாண்புமிகு திரு. வே. வி. சுப்பையா : இந்த அறிக்கைகள் ஆடிட் செய்யப்படுகின்றன. ஆனால் ஆடிட் ரிப்போர்ட் பக்கங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் வைக்க இயலவில்லை.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தத் திருப்பணியையொட்டி நடந்த ஒரு கோபுரத்திற்கான செலவை பிர்லா அவர்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அறநிலையங்கள்.

வினா :* 450 **புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எத்தனை கோவில்கள் அறநிலைய பொறுப் பிலிருக்கின்றன ?

மாண்புமிகு திரு.கே. வி. சுப்பையா : திருச்சி மாவட்டத்தில் 1122 அறநிலையங்கள் இருக்கின்றன.

புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்தில் இந்தக் கோயில்களைச் சேர்ந்த சொத்துக் களிலிருந்து எவ்வளவு வருமானம் அறநிலையக் குழுவிற்குக் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுபற்றிய தகவல்கள் என் னிடத்தில் இல்லை.

குடியிருப்பு மனைகளுக்கு பட்டா வழங்கல்.

* 431—வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், சுக்காலியூர் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தை குடியிருப்பு மனைக் காக பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) மேற்படி இடம் குடியிருப்புக்கு உகந்ததல்ல என்று சுகாதார அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டதால் கோரிக்கை தள்ளிவிடப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மேற்படி இடம் நஞ்சை நிலம் அல்ல, வறட்சியான இடம். ஆகவே அதை மீண்டும் பரிசீலனை செய்து ஆராய்ந்து அந்த இடத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குடியிருப்பு மனையாக மாற்றித்தர மீண்டும் முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன். நஞ்சை நிலம் அல்ல என்பதற்காக அஸைன் செய்யப்படவில்லை. இது வீடுகள் கட்ட உகந்த இடம் அல்ல என்று டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசரால் தெரிவிக்கப்பட்டிருப்பதால், அந்தக் காரணத்தின் அடிப்படையில் தாசில்தார் அவர்கள் கொடுப்பதற்கில்லை, அடமானம் செய்ய உகந்ததல்ல என்று கூறியிருக்கிறார்கள்.

திரு கே. பி. எஸ். மணி : சார், டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் என்னென்ன காரணங்களைக் கொடுத்து அந்த இடம் வீடு கட்டத் தகுதியில்லை என்று கூறியிருக்கிறார்கள் என்பதை அறிய முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : விவரம் இல்லை. ஆனால், அவர்கள் வீடு கட்டுவதற்கு லாயக்கு இல்லை என்பதன் அடிப்படையிலே இதைக் குறிப்பிட்டிருப்பதால் தாசில்தார் அவர்கள் கொடுப்பதற்கில்லை என்று கூறியிருப்பதாக வருவாய்த்துறை அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திரு எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, இம்மாதிரியான புறம்போக்கு இடங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுப்பதற்காக அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்றுதான் திரு சௌந்தரபாண்டியன் அவர்களின் கேள்வி. ஹெல்த் ஆபீசர்கள் பள்ளம்,மேடு என்று எதையோ போட்டுவிடுகிறார்கள். இனிமேலாவது, இதை அரசாங்கம் பரிசீலனை செய்து—இல்லாவிட்டால் தனிக் குழுவை வைத்து—இப்படிப்பட்ட இடங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கக் கட்சியிலே இருக்கின்ற கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியாமல் இருப்பதுதான் வருத்தமாயிருக்கிறது. இந்த அரசாங்கம் 70,000 ஏக்கர்கள் தரிசு நிலங்களைக் கொடுத்தது. 70,000 ஏக்கர் அளவிலே உழுவதற்கும், வீட்டுமனை கட்டுவதற்கும் கொடுத்திருக்கிறது. அதோடு, நிரம்ப வீட்டுமனைகளுக்குக் கொடுப்பது மட்டுமல்லாமல் ஹரிஜனங்களை இந்த லிஸ்டிலே முதன்மையாகக் கருதப்படவேண்டுமென்று சர்க்கார் உத்தரவே மாற்றப்பட்டிருக்கிறது. நிரம்பச் செய்வது என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கொண்டால் நல்லது என்று கருதுறேன்.

திரு என். கிட்டப்பா : கோயில் நிலங்களிலிருக்கும், ஏழை ஹரிஜன மக்களையும், பிற்படுத்தப்பட்ட மக்களையும் அந்த இடங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் இந்த மன்றத்திற்கு ஏற்கெனவே சொன்னேன். இம்மாதிரியான பிறருடைய நிலங்களிலே வீடுகள் கட்டிக்கொண்டிருப்பவர்களை வெளியேற்றக் கூடாது என்பதற்காக, பாதுகாப்பு அளிக்க மசோதா இந்த மன்றத்தின் முன்னால் வர இருக்கிறது என்பதைச் சிலநாட்களுக்கு முன்னால் இந்த மன்றத்தில் அறிவித்திருக்றேன்.